Source: *Tamil Murasu*, p2
Date: 6 December 2022

# 1,000 வகை உயிரினங்களை காக்க வல்லுநர்கள் யோசனை



உலகில் இந்த வகை பறவையின் எண்ணிக்கை இப்போது 250 முதல் 999 வரைதான். வேகமாக அழிந்து வரும் பறவை இனம் இது. **படம்: மாட் பிராடி/ கார்னல் ஆய்வுக்கூடம்**

உலகின் காட்டு வளங்களிலும் நிலப் பரப்புகளிலும் 30% அளவைப் பாதுகாக்க முடியுமானால் ஏறத்தாழ 1,000 சிற்றினங்களைச் சேர்ந்த விலங்குகளை அழிவில் இருந்து காப்பாற்றிவிடலாம் என்று சிங்கப்பூர், அமெரிக்காவைச் சேர்ந்த அறிவியல் வல்லுநர்கள் தெரிவிக்கிறார்கள்.

இந்த 30 விழுக்காட்டு இலக்கை நிறைவேற்ற வேண்டுமானால் அதற்கு கூடுதலாக 2.7 பில்லியன் ஹெக்டர் நிலப்பரப்பு வேண்டும். இந்தப் பரப்பு, சீனா, ரஷ்யா இரு நாடுகளின் மொத்த நிலப் பரப்புக்குச் சமம்.

துணைக்கோளங்களின் படங்களையும் புள்ளிவிவரங்களையும் பயன்படுத்தி சிங்கப்பூர், அமெரிக்காவைச் சேர்ந்த இயற்கை வள பாதுகாப்புத் துறை வல்லுநர்கள் இந்தக் கணக்கீடுகளைச் செய்து இருக்கிறார்கள். சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் இயற்கை, பருவநிலைத் தீர்வு மையம் என்ற அமைப்பு தலைமையில் அந்த ஆய்வு நடத்தப்பட்டது.

அதில் பெருங்கடல், கடல்துறை உயிரினப் பாதுகாப்பு அம்சங்கள் இடம்பெறவில்லை. இப்போது காட்டுவளங்கள் அழிப்பு, சீரழிவு ஆகியவற்றில் இருந்து இந்தப் பூமியின் ஏறத்தாழ 17% நிலப்பரப்பு பாதுகாக்கப்படுகிறது என்று ‘புரோடெக்டட் பிளானட்’ என்ற இணையத் தகவல் தளம் தெரிவிக்கிறது.

ஐநா அமைப்பின் சுற்றுச்சூழல் உயிரியல் பன்மய மாநாடு மோன்ட்ரியல் நகரில் நடக்கிறது. அதில் 2030வது ஆண்டுவாக்கில் குறைந்தபட்சம் பூமியின் 30% நிலப் பகுதியையும் பெருங்கடல் பகுதியையும் பாதுகாப்பதற்கான உலகளாவிய இலக்குகள் பற்றிய பேச்சுவார்த்தைகள் தொடங்குகின்றன.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.